

கலைஞர் நகர் தெற்குபகுதி சார்பில், பகுதி செயலாளர் கே.கண்ணன் தலைமையில் நடைபெற்ற கழகதலைவர் – முதல்வர் அவர்கள் பிறந்தநாள் விழாவில் வாழ்த்தரங்க நிகழ்வில் அமைச்சர் மா.சுப்ரமணியன், இயக்குநர் கரு.பழனியப்பன் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ., காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ., க.தனசேகரன், கவிஞர் காசிமுத்துமாணிக்கம், பகுதி செயலாளர்கள் மு.ராசா, சைதை கிருஷ்ணமூர்த்தி, நெளம்பூர் ராஜன், பெருங்குடி எஸ்.வி.ரவிசந்திரன், வாசுகிபாண்டியன், குணசேகரன், பாலவாக்கம் விஸ்வநாதன், பாலவாக்கம் மனோகரன், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சித்தாலப்பாக்கம் ஜெ.இ.பாண்டியன் தலைமையில் பாட்டு பட்டிமன்றத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி, எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ, ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஜி.வெங்கடேசன், நா.சந்திரபாபு, எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், பா.ரவி, சங்கீதா பாரதி ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

### ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி

# ஏலகிரியில் துணை மின் நிலையம் அமைத்திடுக!

## பேரவையில் க.தேவராஜி வலியுறுத்தல்!



சென்னை, மார்ச் 21-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது ஜோலார்பேட்டை தொகுதி ஏலகிரியில் துணை மின் நிலையம் அமைத்திட வேண்டும் என்று தொகுதி உறுப்பினர் க.தேவராஜி கோரிக்கை விடுத்தார்.

இது குறித்த விவாதம் வருமாறு:-

**க. தேவராஜி:** ஜோலார்பேட்டை சட்டப்பேரவை பகுதிகளை உள்ளடக்கிய ஏலகிரியில் ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுகிற பகுதியில் 14 வட்டங்கள் இருக்கின்றன. அந்த 14 வட்டங்களில் இன்றைக்கு பல்வேறு resortகளை கட்டி, அரசாங்க resortம், தனியார் resortகளும் இருக்கின்றன. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து பொழுது போக்கிற்காக resortக்கு வருகிறார்கள். அங்கே கோயில்கள், நம்முடைய சுற்றுப்புறச் சூழல் பொழுதுபோக்கு எல்லாம் இருப்பதால். அங்கே துணை மின் நிலையம் அமைத்துக் கொடுப்பதற்கு அதற்குரிய இடம் 2 ஏக்கர் அரசு இடம் தொடர்ச்சியாக இருக்கிறது. அதை இந்த ஆண்டிலே, இந்த பட்ஜெட்டிலேயே அமைத்துக் கொடுக்குமாறு அன்போடு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்த வரையில் மொத்தம் திருப்பத்தூர் மாவட்டத்தில் 8 புதிய துணை மின் நிலையங்கள். அவற்றில் ஜோலார்பேட்டையில் 2 புதிய துணை மின் நிலையங்கள். ஒரு துணை மின் நிலையத்திற்கு 1.63 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இன்னொரு துணை மின் நிலையத்திற்கு நிலம் எடுக்கக்கூடிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கின்ற அந்த தேவையை துறைக்கு அனுப்பி ஆய்வு செய்யப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### எஸ்.எஸ்.மீரான் தலைமை!

# துபாயில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!

துபாய், மார்ச் 21-

கடந்த (17.03.25) திங்கட்கிழமை அன்று துபாயில் தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரிய குழு உறுப்பினரும், அமீரக திமுக அமைப்பாளருமான எஸ்.எஸ்.மீரான் தலைமையில் நடைப்பெற்ற முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய 72வது பிறந்த நாள் விழா மற்றும் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி தேரா பகுதியில் அமைந்துள்ள லேண்ட் மார்க் கிராண்ட் ஹோட்டலில் சிறப்பாக நடைப்பெற்றது. இந்நிகழ்வை ஏஜிம் பைரோஸ் கான் தொகுத்து வழங்கிய நிகழ்ச்சியில்,பிளாக் துளிப் செந்தில் வரவேற்புரை வழங்கினார்.

திண்டுக்கல் ஜமால் முஹைதீன் இறைவசனம் ஓதினார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பவர் குரூப் மேலாண்மை இயக்குனர் ஜாஹிர் உசேன் அவர்கள் ரமலான் நோன்பு வாழ்த்துகளை தெரிவித்துகொண்டு, 72வது பிறந்த நாள் காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசை பாராட்டியதோடு, முதல்வருக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டார். அதனை தொடர்ந்து காயிதேமில்லத் பேரவை தாஹா, துபாய் TEPA குழுமத்தின் தலைவர் பால்.பிரபாகர், ஊடகவியாளர் முதுவை ஹிதயாத், ரெங்கராஜன்,சானியோ,முனைவர் ரோஹினி உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிறைவாக பேசிய தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரிய குழு உறுப்பினரும், அமீரக திமுக அமைப்பாளருமான எஸ்.எஸ்.மீரான் அவர்கள் இந்தியாவே வியக்கும் அளவுக்கு திராவிட மாடல் அரசை சிறப்பாக வழி நடத்திகொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை கொண்டவர், கடந்த மாதம் அரசு நிகழ்ச்சியில் இஸ்லாமியர்களின் மனம் குளிரும் வகையில் சென்னையில் ஹஜ் இல்லம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை செய்ததற்கும், கடந்த ஜனவரியில் நடைப்பெற்ற அயலக தமிழர் திருநாள் நிகழ்ச்சியில் அயலக தமிழர்களின் நலனுக்காக ஏராளமான அறிவிப்பினை செய்ததற்கும், குறிப்பாக நூறு ஆசிரியர்கள் மற்றும் தமிழ்க் கலைஞர்களுக்கு பயிற்சி அளித்து இவர்களை அயலக தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு தேவைகளுக்கு அனுப்ப ஒரு திட்டம் உருவாக்கப்படும்.இந்த பயிற்றுநர்கள், அந்த பகுதியிலிருக்கும் தமிழ் சங்கங்களுடன் இணைந்து, தமிழ் மொழியையும்,தமிழ் கலைகளையும் 2 ஆண்டுகளுக்கு நேரடிப்பயிற்சி வகுப்புகள் மூலமாக நடத்துவார்கள். இதற்கு ஆகும் செலவையும் தமிழ் நாடு அரசே ஏற்கும். இதற்காக 10 கோடி ரூபாக் நிதி ஒதுக்கப்படும் என்று அறிவித்த முதலமைச்சருக்கு நன்றியினை தெரிவித்துக் கொண்டார். வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றியினையும், வாழ்த்துகளையும் தெரிவித்துகொண்டார்.

திராவிட கொள்கைகளை பற்றியும்,திராவிட மாடல் அரசைப்பற்றி பேசிய சிறுவர்கள் முகுந்தன் மற்றும் மிருதுளா இருவரும் பொன்னாடை போத்தி கவுரவிக்கப் பட்டார்கள்..

இந்த நோன்பு திறக்கும் நிகழ்ச்சிக்கு காயிதே மில்லத் பேரவை ஹமீது ரஹ்மான்,கோல்டன் கோர் சம்சுதீன்,முதுவை ஹிதாயத்,ஜெஸிலா ரியாஸ்,

மனிதநேய மக்கள் கட்சியை சேர்ந்த இப்ராஹிம், கமால் கேவிஎல்,நஜீம் மரிக்கா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் ஜவேரியா ரஷீது,சரத்,இளமுருகன், வி.எம்.பிரபு,இஞ்சினியர் பாலா,இஷாக்,செந்தில் பிரபு, உதயநிதி பாலா, செய்யது இஸ்மாயில்,பாலா,சேக் தாவுது, அஹமது கபீர், ஃபரீத், பருத்தி இக்பால்,ஜெகபர் அலி, வீ. பாண்டியன், அன்பு, செந்தில் பிரபு, தாரிக், மச்சேந்திர நாதன், அமீன், பன்னீர்செல்வம், தமிழ் உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



துபாயில் தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரிய குழு உறுப்பினரும், அமீரக திமுக அமைப்பாளருமான எஸ்.எஸ்.மீரான் தலைமையில் நடைபெற்ற முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய 72வது பிறந்த நாள் விழா மற்றும் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி தேரா பகுதியில் அமைந்துள்ள லேண்ட் மார்க் கிராண்ட் ஹோட்டலில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வை ஏஜிம் பைரோஸ் கான் தொகுத்து வழங்கிய நிகழ்ச்சியில்,பிளாக் துளிப் செந்தில் வரவேற்புரை வழங்கினார்.

### ச.ராஜன் தலைமை! க.ஜெயராமன் – வி.முருகன் முன்னிலை!

# பெரம்பூர் 46வது வட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## சைதை சாதிக் – ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரை!

சென்னை, மார்ச் 21-

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி 46வது வட்ட தி.மு.க.சார்பில் முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (21.3.2025-வெள்ளிக்கிழமை) மாலை5.30 மணிக்கு அம்பேத்தர் சிலை அருகில் மெகசின் புரத்தில் நடைபெறுகின்றது. கூட்டத்திற்கு வட்ட துணைச் செயலாளர் ச. ராஜன் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் க.ஜெயராமன், வட்டச் செயலாளர் வி.முருகன், வி.வேதா, சி.ஆனந்தி, வை.கௌதமன், வெ.இன்பரசன், கதிவரன்மணி, பி. ஆனந்திஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். டி.டி.மணிமாறன், ஜி.ஜெயகுமார், ஆர்.சீதா ,ஆர்.ரகு, பி.கிருஷ்ணமூர்த்தி, இ.கர்ணா, கே.பிரசாத், எம். ஜெயகிருஷ்ணன், இ.மணிகண்டன், ஜி.கணேசன், எஸ்.சங்கீதா, ஜி.மோகன், ஒய்.மகிமைராஜ், பி.ராதாகிருஷ்ணன், எம்.அருண், எஸ்.கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமைக் கழகப் பேச்சாளர் சைதை சாதிக், சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர், கலாநிதி வீராசாமி எம்.பி., அ.முருகன் , கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன் எஸ்.ஆர். கமலக்கண்ணன், வி.தயாளன், அதமிழ்ச்செல்வன், ப. மதிவாணன், தி.கமலக்கண்ணன், க.அமுல், மலைச்சாமி ,கபாபு, தஆறுமுகம், க. அருள், மாரிமுத்து, கே.தினகரன், கே.வி.ராஜன், எம். கார்த்திபன், மு.உமாபதி, இரா. அரிதாஸ், கே.இ.செந்தமிழரசு, சி.எஸ்.இரவி, ந. சர்வமேயாதாஸ், க.சர்மிளா காந்தி, மு.சாகும்அமீது, எஸ்.சாக்ரடீஸ், உஜோதி மணி, வி.எஸ்.பிரபு.சுரேஷ், அ.ஜியாவுதீன், இரா.லீலா வேலு, எம்.லதா, அசெந்தூர் பாண்டியன், எம்.ராஜ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டுசிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களௌ பிரிட்ஜ் பி. பாலன், எம்.மூர்த்தி, கே.ரங்கநாதன், எம்.கோபி, டி.பாலு, எஸ்.ஜெயேந்திரன், ஜி.ஆனந்தன், எல்.சாந்தகுமார், எஸ்.சிவகுமார், பி. கஜேந்திரன், சி.சுப்பிரமணி, சி.மகேந்திரன், ஆர்.நாகலிங்கம், டி.முருகன், எம்.எஸ். மணி, எம்.பழனி, பி.சக்திவேல், எம்.கே.புருஷோத்தமன், ஜி.சாமிநாதன், இ. ராஜேஷ், சி.ஸ்ரீராம், எம். ஆனந்த், கே.முனுசாமி, பி.மூர்த்தி, ஏ.அருள், ஆரோக்கியராஜ் ஆகியோர் செய்துள்ளனர். க.ஜெயராஜ், எம்.அருட்செல்வம்ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### பாக முகவர்கள் – வட்டக் கழக நிர்வாகிகள்

# 123 ‘அ’ வட்ட கழக தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்!

## தலைமை: மூ. இராஜேந்திரன் – முன்னிலை: நந்தனம் கி.மதி, எம்.சி.

சென்னை, மார்ச் 21-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123 ‘அ’ வட்ட கழக சார்பில் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதியில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மயிலை. த. வேலு எம்.எல்.ஏ. அறுவுறுத்தலின்படி

பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, எம்.சி மற்றும் தொகுதி பார்வையாளர் கோ.வி.லெனின் ஆகியோர் ஆலோசனைபடி மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் நடைபெறும் பி.எல்.ஏ.2 பாக முகவர்கள் மற்றும் பி.எல்.சி. பாக உறுப்பினர்கள் சமூக வலைதள செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கான ஆலோசனை மற்றும் பயிற்சி கூட்டம் நாளை (22.03.2025) சனிக்கிழமை மாலை 6.00 மணி அளவில் ஆழ்வார்பேட்டை, சி.பி. இராமசாமி சாலையில் அமைந்துள்ள சட்டமன்ற அலுவலக வளாகத்தில் வட்டக் கழக செயலாளர் மூ. இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அமைப்பாளர் ஆர். கதிரவன் ஆலோசனை வழங்குகிறார்கள்.

ஆகவே 123 அ வட்ட கழகத்திற்குட்பட்ட பாக முகவர்கள் பி.எல்.ஏ2. பி.எல்.சி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 123 ‘அ’ வட்ட கழக சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

### எச். பீர்முகமது ஏற்பாட்டில் – கா.தாமரைச்செல்வன் தலைமையில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் 300 இஸ்லாமியர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## புழல் எம். நாராயணன் வழங்கினார் !

சென்னை, மார்ச் 21-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில்,தமிழ்நாடுக் முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, இஸ்லாமிய பெருமக்கள் 300க்கும் மேற்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மாதவரம் வடக்கு பகுதி 19வது வட்டம் இரண்டாவது பிரதான சாலையில் உள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில்,19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் 300 இஸ்லாமிய பெருமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச். பீர்முகமது ஏற்பாட்டில் நடைபெற்றது.

இஸ்லாமிய பெருமக்களுக்கு அரிசி, சேமியா, சர்க்கரை மற்றும் சேலைகள் உள்ளிட்ட தொகுப்பை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

நலத்திட்ட உதவிகளை பெற்றுக் கொண்ட இஸ்லாமிய பெருமக்கள் கழகத் தலைவர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அன்புடன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் இஸ்லாமிய பெருமக்களின் ஜமாத் தலைவர் உமர் கர்த்தாப், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் கே. ஏழுமலை, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார்,பகுதி மகளிர் அணி அமைப்பாளர் சுகாசினி, துணை அமைப்பாளர்கள் சரஸ்வதி, அத்திக்குளம் தேவி, பகுதி தொண்டரணி துணை அமைப்பாளர்கள் பெரியநாயகி, கஸ்தூரி, கலைச்செல்வி, சுந்தரி, பாக முகவர்கள் ராஜேஷ் கண்ணன், சிவராமன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச். பீர்முகமது ஏற்பாட்டில், 19வது வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில், மாத்தூர் இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில்,300 இஸ்லாமிய பெருமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். மகூதி தலைவர் உமர் கர்த்தாப், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, கே. ஏழுமலை, எஸ். உதயகுமார், சுகாசினி, சரஸ்வதி, அத்திக்குளம் தேவி, கஸ்தூரி, பெரியநாயகி ,சுந்தரி, கலைச்செல்வி, ராஜேஷ் கண்ணன், சிவராமன் உள்ளிட்ட பல கலந்து கொண்டனர்.